

கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் நகராட்சி, பூச்சி விளாகம் பகுதியில் ஒகி புயலால் சேதமடைந்த மின்கம்பங்களை சரிசெய்யும் பணியினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா.சவான்,இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

செ.வெ.எண் : நாள் : 04.12.2017

**கன்னியாகுமரி மாவட்டம்**

**ஓகி புயலால் சேதமடைந்த மின்கம்பங்களை சரிசெய்யும் பணியினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா.சவான்,இ.ஆ.ப., அவர்கள் நேரில் ஆய்வு செய்து பணிகளை துரிதப்படுத்தினார்.**

---

கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் நகராட்சியில் ஓகி புயலால் சேதமடைந்த மின்கம்பங்களை சரிசெய்யும் பணியினை நேசமணிநகர், சைமன் நகர், கார்த்தைவடலி, மற்றும் பூச்சிவிளாகம் ஆகிய பகுதிகளில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா.சவான்,இ.ஆ.ப., அவர்கள் நேரில் இன்று (04.12.17) ஆய்வு செய்தார்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது :-

கன்னியாகுமரி மாவட்டத்தில் 29.11.17 அன்று பெய்த பலத்தமழை மற்றும் சூறைக்காற்றினால் மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் மரங்கள் முறிந்து மின் கம்பிகளின் மீது விழுந்ததால், மின்கம்பங்கள் சாய்ந்து மின் விநியோகம் பாதிக்கப்பட்டது. மாவட்ட நிர்வாகத்தின் மூலம் உடனடியாக துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு சாய்ந்த மின்கம்பங்கள் சரிசெய்யப்பட்டு மின் இணைப்பு வழங்கும் பணி துரிதமாக நடைபெற்று வருகிறது. நாகர்கோவில் நகராட்சிக்குட்பட்ட 52 வார்டுகளில், நேற்றுவரை 20 வார்டுகளுக்கு மின் விநியோகம் வழங்கப்பட்டுள்ளது. மேலும், இன்று 10 வார்டுகளுக்கும் சேர்த்து மொத்தம் 30 வார்டுகளில் முழுமையாக பணிகள் முடிக்கப்பட்டு மின் விநியோகம் வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள வார்டுகளில் மரங்களை அகற்றி, சேதமடைந்த மின்கம்பங்களுக்கு பதிலாக புதிய மின்கம்பங்கள் நிறுவப்பட்டு பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அனைத்து வார்டுகளிலும் 100 சதவீத பணிகள் முடிக்கப்பட்டு ஓரிரு நாட்களில் மின்விநியோகம் வழங்கப்படும்.

மேலும், நாகர்கோவில் நகராட்சி பகுதிக்கு குடிநீர் விநியோகம் செய்யும் பணி துரிதமாக நடைபெற்று வருகிறது. முக்கூடல் தண்ணீர், நகராட்சி பகுதிகளில் விநியோகம் செய்ய இரண்டு 500KV திறன் கொண்ட ஜெனரேட்டர்கள் மூலம் மின் மோட்டார்கள் இயக்கப்பட்டு மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டிகளில் நீர்த்தேக்கம் செய்யப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது. குடிநீர் தட்டுப்பாடு இல்லாதவாறு லாரிகள் மூலமும் தண்ணீர் மக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும், நான்கு மொபைல் ஜெனரேட்டர் மூலம் அனைத்து வார்டுகளிலும் உள்ள ஆழ்துளைக்கிணறுகளில் அமைக்கப்பட்டுள்ள மின் மோட்டார்கள் இயக்கப்பட்டு மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டிகளில் நீர்த்தேக்கம் செய்யப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது.

ஆய்வின் போது, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அப்பகுதி பொதுமக்களிடையே தண்ணீர் விநியோகம் குறித்து கேட்டறிந்தார், ஓரிரிரு நாட்களில் மரங்கள் அகற்றப்பட்டு மின் விநியோகம் வழங்கப்படும் என உறுதியளித்தார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்**